# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4

## முதலாந் தவணைப் பரீட்சை – 2016

## வணிகக்கல்வியும் கணக்கீடும் I,II

## தரம் - 10

சுட்டெண்:.................................. நேரம் : 3 மணி

**பகுதி (I)**

01. மிகை உற்பத்தியை பரிமாற்றம் செய்யும் வியாபார முறை
    1) சில்லறை வியாபாரம் 2) பண்டமாற்று 3) நேரடி விற்பனை 3) விற்பனை
02. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்வதில் அடிப்படைக் காரணியாக அமைவது எது?
    1) வர்த்தகம் 2) வியாபாரம் 3) உற்பத்தி 4) பண்டமாற்று
03. தேவைகளின் பண்புக் காரணி அல்லாதது.
    1) அத்தியவசியமானது 2) தோற்றுவிக்கக்கூடியது
    3) வரையறுக்கப்பட்டவை 4) பொதுத்தன்மை கொண்டது.
04. இன்று முழு உலகமும் "உலகக் கிராமம்" என்னும் நிலைக்கு மாறக் காரணமாக உள்ளது.
    1) கைத்தொழில் புரட்சி 2) விளம்பரம்
    3) தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் 4) உற்பத்தி
05. பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணிகள் அல்லாதது.
    1) உழைப்பு 2) மூலதனம் 3) முயற்சி 4) சம்பளம்
06. உங்களது பாடசாலையுடன் தொடர்புடைய அக்கறை செலுத்தும் பிரிவினராக கருதக்கூடியவர் யார்?
    1) பழைய மாணவர்கள் 2) போட்டியாளர்கள் 3) அயலவர்கள் 4) நண்பர்கள்
07. உற்பத்தியின் இறுதி வடிவம்
    1) உற்பத்தி காரணிகள் 2) தொழிற்பாடுகள்
    3) பொருட்கள் சேவைகள் 4) சன்மானங்கள்
08. அகச்சூழல் காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுவது.
    1) உரிமையாளர் 2) போட்டியாளர் 3) அரசு 4) வழங்குனர்
09. நுகர்வொர, வணிகச் சமூகம் போன்றவர்களை பாதுகாக்கும் நோக்குடன் அங்கீகரிக்கப்பட்ட சட்ட விதிகள் எச்சூழல் தொகுதியைச் சான்றது?
    1) பொருளாதாரச் சூழல் 2) அரச சட்டச்சூழல்
    2) தொழில்நுட்பச் சூழல் 4) இயற்கைச் சூழல்
10. செய்தியை ஒத்த பிரதியை பெற்றுக்கொள்ளும் முறை.
    1) தொலைபேசி 2) மின்னஞ்சல் 3) தொலை நகல் 4) யாவும் சரி
11. இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் தீர்மானிக்கும் அமைப்பு எது?
    1) இலங்கை வங்கி 2) இலங்கை மத்திய வங்கி 3) மக்கள் வங்கி 4) சேமிப்பு வங்கி
12. பொருட்கள் சேவைகளது பொதுவிலை மட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் எவ்வாறு அழைக்கப்படும்.
    1) வருமானப் பரம்பல் 2) நிறைதொழில் மட்டம் 3) பணவீக்கம் 4) வட்டி வீதங்கள்
13. தனநபர் வருமானத்திலிருந்து நுகர்விற்கு பயன்படுத்தி செலவிடாது வைத்திருக்கும் பணப்பெறுமதி எவ்வாறு அழைக்கப்படும்.
    1) நுகர்வு 2) முதலீடு 3) சேமிப்பு 4) பரிமாற்றம்
14. பூகோளமயச் சூழலினால் ஏற்படும் பாதகமான விளைவு எனக் கருதப்படுவது யாது?
    1) நவீன நுட்பமுறைகளைப் பெற்றுக் கொள்ளல்
    2) இயந்திரப் பாவனைகள்
    3) உள்நாட்டுக் கலாச்சாரத்தில் பாதகமான மாற்றங்கள்

4) வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்கள்

15. அரசு மூலம் குறைவான வட்டி வீதத்தில் கடன் முறைகள் அறிமுகப்படுத்தல் எக்காரணிகளுள் உள்ளடங்கும்.

1) பலம் 2) வாய்ப்புக்கள் 3) அச்சுறுத்தல் 4) பலவீனம்

16. பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு உட்படாத காரணிகளாக அமைவது.

1) தேசிய உற்பத்தி 2) வருமானம்

3) சேமிப்பு 4) குழந்தை பிறப்பு வீதம்

17. பின்வருவனவற்றுள் தனியார் துறை அமைப்பு அல்லாதது எது?

1) தனி வியாபாரம் 2) பங்குடமை 3) சங்கங்கள் 4) அரச கம்பனி

18. அரசினால் மூலதனமிடப்பட்டு அரச உடமையாகக் காணப்படும் நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

1) தனியார்துறை வணிகம் 2) பொதுத்துறை வணிக அமைப்பு

3) இலாபநோக்கற்ற வணிகம் 4) கம்பனிகள்

19. சனநாயக நிர்வாக அடிப்படையில் இயங்கும் வணிக அமைப்பு.

1) தனியாள் உடமை 2) பங்குடமை 3) கூட்டுறவு 4) கம்பனி

20. பங்குடமையொன்றில் பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் என குறிப்பிடப்படும் சட்டம்.

1) பங்குடமைச் சட்டம் 2) 2007ம் 7ம் இலக்க கம்பனிச் சட்டம்

3) மோசடி தவிர்ப்புச் சட்டம் 4) 1918ம் 6ம் இல பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டம்

21. பாராளுமன்றத்தின் நிறைவேற்றப்பட்ட பொதுவான சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்ற அமைப்பாக கருதக்கூடியது.

1) அரச கூட்டுத்தபனங்கள் 2) நலன்புரிச் சங்கங்கள்

3) கம்பனி 4) பங்குடமை

22. குறைந்த மூலதனம், குறைவான சட்டதிட்டங்களுடன் ஆரம்பிக்கக்கூடிய வணிகம் எது?

1) சிற்றளவு வணிகம் 2) பேரளவு வணிகம்

3) வியாபாரம் 4) அரச திணைக்களங்கள்

23. தனியாள் உரிமை வணிகத்தினை பதிவு செய்ய வேண்டுமாயின் எச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்ய வேண்டும்.

1) 2007ம் 7ம் இல கம்பனிச் சட்டம்

2) 1918ம் 6ம் இலக்க வியாபார பெயர்ப்பதிவு கட்டளைச் சட்டம்

3) 1890ம் பங்குடமைச் சட்டம்

4) மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்

24. பங்குடமை வணிகத்தின் பங்காளரது எண்ணிக்கையாகக் கருதப்படுவது.

1) 1 – 50 பேர் 2) 2 – 20 பேர் 3) 2 பேர் 4) 7 பேர்

25. கூட்டிணைக்கப்பட்ட ககம்பனி எச்சட்டத்தின் பிரகாரம் பதிவுசெய்தல் வேண்டும்.

1) 1918ம் 6ம் இலக்க வியாபார பெயர்ப்பதிவு கட்டளைச் சட்டம்

2) 2007ம் 7ம் இல கம்பனிச் சட்டம்

3) 1890ம் பங்குடமைச் சட்டம்

4) 1972ம் கூட்டுறவுச் சட்டம்

26. அண்மையில் அரசினால் பெற்றொலின் விலை குறைப்பு செய்யப்பட்டது எச்சூழல் தொகுதியைச் சார்ந்தது.

1) அரச சட்டச் சூழல் 2) பொருளாதாரச் சூழல்

3) சமூக கலாச்சார மூழல் 4) தொழில்நுட்ப சூழல்

27. பின்வருவனவற்றுள் எது இலாபநோக்குடைய ஒரு பொதுத்துறைவணிக அமைப்பாகும்?

1) கூட்டுறவு 2) அரச கம்பனி

3) அரச கூட்டுத்தாபனம் 4) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

28. அதிகளவு மூலதனத்தையும் அதிகளவு ஊழியர்களையும் கொண்ட கைத்தொழில் முறை

1) சிற்றளவு வணிகம் 2) பேரளவு வணிகம்

3) நடுத்தர வணிகம் 4) குடிசைக் கைத்தெழில்

29. மூலதனமானது உரிமையாளராகிய தனிநபரால் மட்டும் ஈடுபடுத்தப்படும் வணிக அமைப்பு எது?

1) பங்குடமை 2) தனியாள் உரிமை 3) கம்பனி 4) கூட்டுறவு

30. பங்குடமையானது ரூ.1000 அல்லது அதற்கு மேற்பட்டு காணப்படின் எழுத்து மூலமான ஒப்பந்தத்தைக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தும் சட்டம்.
   1) பங்குடமைச் சட்டம் 1890
   2) மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
   3) கம்பனிச் சட்டம் (2007ம் 7ம் இல)
   4) 1972ம் 5ம் இல கூட்டுறவுச் சட்டம்
31. தனியுடமை வணிகத்தின் பெயர் எவ்வாறு அமையப் பெறலாம்?
   1) வரையறுக்கப்பட்ட கம்பனி  2) ஸ்டோர்ஸ்
   3) திணைக்களம்  4) கூட்டுத்தாபனம்
32. பின்வருவனவற்றுள் பொதுவான அன்னியச் செலாவணி மாற்று வீதம் எது?
   1) ரூபா  2) அமெரிக்க டொலர்  3) வெள்ளி  4) கனடிய டொலர்
33. பின்வருவனவற்றுள் மூலதனச் சொத்து அல்லாதது எது?
   1) இயந்திரம்  2) கட்டடம்  3) மோட்டார் வாகனம்  4) கனிய வளம்
34. கடை காரியாலய ஊழியர் சட்டம் எத்தனையாம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது?
   1) 2003ம் 9ம் இல  2) 2007ம் 7ம் இல
   3) 1954ம் 14 ம் இல  4) 1972ம் 5ம் இல
35. பாடசாலையில் இயங்கக்கூடிய சங்க வகை அமைப்ப எனக் கருதப்படுவது.
   1) விவசாயக் கழகம்  2) விளையாட்டுக் கழகம்
   3) பழைய மாணவர் சங்கம்  4) மின்சார சபை
36. பின்வரும் காரணிகளுள் அடிப்படைத் தேவைகளாகக் கருதக்கூடியது.
   1) உணவு  2) சோறு  3) மருந்து  4) பொழுதுபோக்கு
37. சட்ட ஆளுமை கொண்ட தனியார்துறை நிறுவனங்களில் ஒன்று.
   1) பங்குடமை  2) தனியுடமை  3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி  4) கூட்டுத்தாபனம்
38. தனியுடமை வணிகங்கள் அதிகமாகக் காணப்படுவதற்கான பிரதான காரணம் யாது?
   1) சட்ட ரீதியான பிரச்சினை எழாமை
   2) ஆரம்பிப்பதும் நடாத்திச் செல்வதும் இலகுவானது
   3) வரையறையற்ற இலாபம் கிடைக்கும்
   4) எல்லொரது விருப்பத்திற்கிணங்க தெரிவு செய்யப்பட்டிருக்கும்
39. வணிக நிறுவனமொன்றின் பலவீனமாகக் கருதக்கூடியது.
   1) போதிய நிதி வசதி  2) பயிற்றப்படாத ஊழியர்கள்
   3) சிறந்த திட்டமிடல்  4) வினத்திறனான முகாமை
40. நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப வளங்களின் தன்மையை மாற்றி மேலதிக பெறுமதியை வழங்கல்
   1) வர்த்தகம்  2) உற்பத்தி  3) வியாபாம்  4) யாவும் சரி

## பகுதி (II)

**முதலாம் வினா உட்பட எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. விமல் தனது உயர்தர கற்கை நெறியை முடித்துக் கொண்ட முயற்சியாளன். இவர் சுயமாக வணிக அமைப்பு ஒன்றை செயற்படுத்த எண்ணினான். இதற்காக அவனது தந்தையின் ஆலோசனையுடன் அவனது சேமிப்பு பணமாகிய ரூ. 200 000 இனை பயன்படுத்தி சிற்றளவு வணிக வியாபார நிலையம் ஒன்றை ''விமல் ஸ்டோர்ஸ்'' எனும் பெயரில் ஆரம்பித்தான். தொடர்ந்து பொருட்களை இலகுவாக நுகர்வோருக்கு வழங்க மோட்டார் வாகனம் ஒன்றையும் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டான். மேலும் தனது வணிகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் அவனது நண்பனான ரகுவையும் தனது வியாபார முயற்சியில் இணைத்துக் கொண்டான். அவனது மூலதனம் ரூ.100 000 ஆகும். இவ்விடயங்களைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1) விமல் ஆரம்பித்த வணிக அமைப்பு எத்தகையது?
2) இவ் வணிக அமைப்பு பதிவு செய்ய வேண்டுமா? காரணம் தருக.
3) இவ் வணிக அமைப்புக்கு பலமாக காணப்பட்ட காரணிக்ள 2 தருக.
4) விமலும் நண்பனும் இணைந்த செயற்படக்கூடிய வணிக அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
5) இவர்களிடம் ஒப்பந்தம் எதுவும் இல்லாதவிடத்து எந்த சட்டத்தை பின்பற்ற வேண்டும்?
6) நுகர்வோருக்குபொருட்களை விநியோகிக்க மேற்கொண்ட நடவடிக்கை யாது?
7) இவ் வணிக அமைப்பு இலாபத்தை எவ்வாறு பகிர முடியும்?
8) வணிக நிறுவனங்கள் பதிவு தொடர்பான இரண்டு சட்டங்கள் எழுதுக.
9) இருவரும் இணைந்து செயற்படுவதால் எத்தகைய பெயர் அமையப் பெறலாம்?
10) அளவு அடிப்படையில் வணிக அமைப்பை வகைப்படுத்துக.

02. மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை தேவைகளும் விருப்பங்களும் காணப்படுகின்றன.

1) வணிகம் என்பது யாது? (2 புள்ளிகள்)
2) பொதுவாக வணிக அமைப்புக்களில் காணப்படும் வணிக நோக்கங்கள் 2 எழுதுக. (2 புள்ளிகள்)
3) தேவை என்பதை வரைவிலக்கணப்படுத்தி தேவைகளின் பண்புகள் 4 எழுதுக. (6 புள்ளிகள்)

03. ''தேவை, விருப்பங்களை நிறைவு செய்கின்ற செயன்முறை உற்பத்தி வணிகம்'' ஆகும்.

1) பொருள் உற்பத்தி வணிகம் எனப்படுவது யாது?
2) சேவை வழங்கல் வணிகத்திற்கு உதாரணம் 4 தருக.
3) உற்பத்தி காரணிகள் எவையென குறிப்பிடுக
4) மூலதனச் சொத்துக்களிற்கு உதாரணம் 2 தருக.

(10 புள்ளிகள்)

04. வணிக நிறுவனங்களை மாற்றத்திற்கு உட்படுத்தும் சூழல் காரணிகள் காணப்படுகின்றன.

1) வணிக நிறுவனத்தில் அக்கறையுடைய தரப்பினர் 3 தருக.
2) வணிகச்சூழலை வகைப்படுத்திக் காட்டுக.
3) சட்டச்சூழல் காரணிகள் எவை எனக் குறிப்பிடுக.
4) தொழிநுட்பச் சூழல் மாற்றங்களினால் ஏற்படுத்தப்பட்ட நவீன போக்குகளுக்கு உதாரணம் 2 தருக.

(10 புள்ளிகள்)

05. 1) பூகோளமயமாதல் எனப்படுவது யாது?

2) பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் 2 பாதகமான விளைவுகள் 2 தருக.
3) வணிகமொன்றில் காணப்படும் பலம், பலவீனங்கள் 2 வீதம் தருக.

(10 புள்ளிகள்)

06. 1) வணிக அமைப்புக்களை வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

2) தனியாள் உரிமை வணிகத்தின் பண்புகள் 4 எழுதக.
3) கூட்டுறவுச் சங்கங்களின் அனுகூலங்கள் 2 தருக.
4) வணிகமொன்றை பதிவு செய்வதனால் பெறக்கூடிய நன்மைகள் 4 தருக. (10 புள்ளிகள்)